# விழுப்புரம் வடக்கு மாவட்டம் - செஞ்சி தொகுதி கழக மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

12ஆம் பக்கத் தொடர்ச்சி...

வந்துவிடும். மீண்டும் தமிழ்நாட்டுக்குள் ஹிந்தியைத் திணிப்பார்கள். மீண்டும் தமிழ்நாட்டுக்குள் குறுக்கு வழியில் சமஸ்கிருதத்தைச் சேர்த்து திணிப்பார்கள். இதைத் தெரிந்துகொண்ட நம்முடைய தலைவர்தான் ஆரம்பத்திலேயே புதிய கல்விக் கொள்கை எங்களுக்கு வேண்டாம் என்று புறக்கணித்தார்.

### புதிய கல்விக் கொள்கை!

ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாவே சொன்னார். மற்ற மாநிலங்கள் எல்லாம் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறது, தமிழ்நாடு மட்டும் நிராகரிக்கிறது. நாங்கள் கொடுக்க வேண்டிய 2,500 கோடி ரூபாயைக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார். புதிய கல்விக் கொள்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி னார்கள். நம்முடைய தலைவர் சொன்னார். நீ புதிய கல்விக் கொள்கை மூலமாக மீண்டும் தமிழ்நாட்டுக்குள் சமஸ்கிருதத்தைக் கொண்டு வருகிறாய், புதிய கல்விக் கொள்கை மூலமாக மீண்டும் ஹிந்தி திணிப்பைக் குறுக்கு வழியில் கொண்டு வருகிறாய், குலக்கல்வி திட்டத்தை மீண்டும் கொண்டு வர முயற்சிக்கிறாய், 2,500 கோடி இல்லை, நீ 10,000 கோடி கொடுத்தாலும் தமிழ்நாட்டுக்குள் எந்த நேரத்திலும் நான் புதிய கல்விக் கொள்கையை விடமாட்டேன் என்று சொன்னவர் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்.

இன்றைக்கு மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் சொல்கிறார்கள். தமிழ்நாடு அன்றைக்கே நிராகரித்தது. நாமளும் நிராகரிப்போம் என்று இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பின்தொடர்ந்து மற்ற மாநில முதலமைச்சர்கள் வந்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஒன்றிய அரசு ஒரு முடிவெடுக்கிறது என்றால், மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் முதலில் தமிழ்நாடு முதலமைச்சர் என்ன முடிவெடுத்திருக்கிறார், தமிழ்நாடு மக்கள் என்ன முடிவெடுக்கிறார்கள் என்று மற்ற மாநில முதலமைச்சர்கள், மற்ற மாநிலங்கள் எல்லாம் கூர்ந்து கவனிக்கிற மாநிலமாக இன்றைக்குத் தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது.

தொகுதி மறுவரையறையைக் கொண்டு வருகிறார்கள். 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாம் வைத்திருக்கிறோம். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதால் 39 தொகுதியை குறைப்ப தற்கான முயற்சியில் இன்றைக்கு ஒன்றிய அரசு மேற்கொண்டு இருக்கிறது.

### மறைமுகத் திட்டம்!

தமிழ்நாட்டின் உரிமையைப் பறிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் ஒன்றிய பா.ஜ.க அரசு செய்யவில்லை. குறிப்பாக, எஸ்.ஐ.ஆர் (Special Intensive Revision) என்ற திட்டத்தைக் கொண்டு வந்து ஒன்றிய அரசு தேர்தல் ஆணையம் மூலமாக இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதன் நோக்கமே பா.ஜ.கவுக்கு எதிராக வாக்களிக்கக்கூடிய குறிப்பாக இஸ்லாமியர்கள், சிறுபான்மையினர், மகளிர், ஒடுக்கப்பட்ட மக்களுடைய ஓட்டுக்களை நீக்குவதுதான் ஒன்றிய பா.ஜ.க அரசின், தேர்தல் ஆணையத்தின் மறைமுகத் திட்டம்.

ஆகவேதான் இன்றைக்குக் கழகம் ஒரு பக்கம் எஸ்.ஐ.ஆர்ருக்கு சட்டபூர்வமான நடவடிக்கை, சட்ட போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம். மறுபக்கம் மக்களுடைய வாக்குகளைப் பாதுகாக்க இரவு பகல் பார்க்காமல் நம்முடைய கழகத் தொண்டர்கள், கழக உடன்பிறப்புகள்தான் இன்றைக்குக் களத்தில் நின்று எஸ்.ஐ.ஆர் மூலமாகவும், தமிழ்நாட்டு மக்களுடைய வாக்குரிமையையும் கடைசியில் தி.மு.க தொண்டர்தான் இன்றைக்குக் காப்பாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

செஞ்சி தொகுதியைப் பொறுத்தவரைக்கும் எஸ்.ஐ.ஆர் பணிகளை மிகவும் விழிப்புணர்வோடு செய்துகொண்டு இருக்கிறீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன். முதலில் அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். எஸ்.ஐ.ஆர் பணிகள் இன்னும் முடியவில்லை. 11ஆம் தேதி வரைக்கும் கால அவகாசம் நீட்டிப்பு செய்திருக்கிறார்கள். எஸ்.ஐ.ஆர் பணிகள் தொடங்கும்போதே தலைவர் சொன்னார், இது மழைக்காலம். இப்போது செய்வது கஷ்டம் என்று முதன்முதலில் சொன்னது நம் தலைவர் அவர்கள்தான்.

### உங்களுடைய களப்பணி!

தமிழ்நாட்டில் அரசுப் பணியாளர்கள் முன்னெச்சரிக்கை பணிகளை, மழை நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும். எனவே இதற்கு இன்னும் அவகாசம் வேண்டும் என்று முதலில் சொன்னவர் நம்முடைய தலைவர். ஆனால், எஸ்.ஐ.ஆரை நடத்தியே தீருவோம் என்று ஒன்றிய அரசு, தேர்தல் ஆணையம் பிடிவாதம் பிடித்தது. ஆனால் கடந்த ஒரு மாதமாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பொதுமக்களுக்கு எஸ்.ஐ.ஆர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுப்பதில், கழக உடன்பிறப்புகள் நீங்கள் மும்முரமாக உங்களுடைய களப்பணியை செய்திருக்கிறீர்கள்.

பொதுமக்களின் வாக்குரிமையுடைய பாதுகாவலர்களாக இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்துடைய உடன்பிறப்புகள் நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய உழைப்பு சாதாரண உழைப்பு கிடையாது. நீங்கள் உழைத்த உழைப்புக்கு நிச்சயம் சட்டமன்றத் தேர்தலில் இந்த செஞ்சி தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை நாம் அடைந்தே தீருவோம்.

இன்றைக்குத்தான் அ.தி.மு.க. தொண்டர்கள் இந்த எஸ்.ஐ.ஆரில் என்ன பிரச்சினை என்று அவர்கள் பேசவே ஆரம்பித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு மாதமாகத் தூங்கி இருக்கிறார்கள். ஆனால், எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்றைக்கு எஸ்.ஐ.ஆரை ஆதரிக்கிறார். ஏனென்றால், அவருக்கு வேறு வழி கிடையாது. இல்லையென்றால், அமித்ஷா கோபித்துக் கொள்வார். அமித்ஷாவுக்கு எதிராக மூச்சுகூட விடுவதற்கு எடப்பாடி பழனிசாமி அவர்கள் பயப்படுவார்.

குனிந்து, குனிந்து அடிமைகளின் முதுகெலும்பு முறிந்து போனதுதான் மிச்சம். அது மட்டும்தான் இன்னும் அவர்களிடம் மிச்சம் இருக்கிறது. இன்றைக்கு பா.ஜ.கவின் ஒரு கிளை அமைப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகமாக அ.தி.மு.க இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

எனவே அ.தி.மு.க.வை நாம் கட்சி என்று நினைக்க வேண்டாம். அது ஒரு கிளை. அதன் தலைமை அலுவலகம் டெல்லியில் இருக்கக்கூடிய அமித்ஷாவின் வீடு. ஏனென்றால், அ.தி.மு.க.வில் என்ன பிரச்சினை வந்தாலும், இன்றைக்கு இந்த விழுப்புரம் மாவட்ட, செஞ்சி தொகுதியில் ஏதாவது ஒரு பிரச்சினை வந்தது என்றால், இங்கு இருக்கக்கூடிய ஒன்றிய செயலாளரைச் சென்று பார்ப்போம்.

பெரிய பிரச்சினை என்றால் மாவட்டச் செயலாளரைச் சென்று பார்ப்போம். ரொம்ப பெரிய பிரச்சினை என்றால் அறிவாலயத்துக்குப் போவோம். சென்னைக்குப் போவோம். தலைமை நிலையத்துக்குப் போவோம். சென்று நம் அமைப்புச் செயலாளர், தலைவரைப் பார்த்து மனு கொடுப்போம், தலைவர் முடிவெடுக்கட்டும் என்று அங்கு வருவீர்கள்.

ஆனால், அ.தி.மு.க.வின் இன்றைய நிலைமையை யோசித்துப் பாருங்கள். ஒவ்வொருத்தரும் பொய் சொல்லிவிட்டு, நான்கு கார் மாறி, மாறிச் சென்று, திருட்டுத்தனமாக டெல்லிக்குச் சென்று வருகிறார்கள். முன்பாவது திருட்டுத்தனமாகச் சென்று வந்தார்கள். இப்போது வெளிப்படையாகப் போக ஆரம்பித்து விட்டார்கள்.

சில நாட்களுக்கு முன்பு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கார் மாறி அமித்ஷாவின் வீட்டுக்குச் சென்று வந்தார். சமீபத்தில் . செங்கோட்டையன் அவர்கள் ஆன்மிகப் பயணத்துக்காக ஹரித்துவார் போகிறேன் என்று சொல்லிச் சென்று, அவர் அமித்ஷாவைப் பார்த்துவிட்டு வந்தார். இன்றைக்கு அமித்ஷாவின் அனுமதியை வாங்கிவிட்டு, அவரின் கட்டளைக்கு இணங்க அவர் ஒரு இயக்கத்தில் சென்று சேர்ந்துவிட்டார். அது அவர் விருப்பம்.

நேற்று முன்தினம் முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.எஸ் அவர்களும் டெல்லிக்குச் சென்று வந்துள்ளார். என்ன உத்தரவு வாங்கி வந்துள்ளார் என்று இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. எனவே இன்றைக்கு அ.தி.மு.க அமித்ஷாவின் கைகளுக்குப் போய்விட்டது. அதனால்தான் தமிழ்நாட்டுக்கு எதிராக ஒன்றிய அரசு என்ன செய்தாலும், அதற்கு இந்த அடிமைகள் வாயை மூடிக்கொண்டு, அவர்களுக்கு ஜால்ரா அடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

### ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை!

கோயம்புத்தூருக்கும், மதுரைக்கும் மெட்ரோ இரயில் திட்டம் கேட்டோம். அதற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை. அடுத்து, தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் செய்ய ஈரப்பதத்தின் அளவை உயர்த்துவதற்கு நாம் போராட்டம் நடத்தினோம். திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டம் நடத்தியது. அரசு இதற்கு வேண்டுகோள் வைத்தது. அதையும் ஒன்றிய அரசு நிராகரித்துவிட்டது.

ஆனால், எடப்பாடி பழனிசாமி அவர்கள் அடிக்கடி சொல்வார். நானும் ஒரு விவசாயி என்று தனக்குத்தானே பில்டப் கொடுத்துக்கொண்டு விவசாயிகளை ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார். தமிழ்நாட்டில் எடப்பாடி அவர்கள் துரோகம் பண்ணாதவர்களே கிடையாது என்ற நிலைமையை எடப்பாடி பழனிசாமி அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார். குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்து, இஸ்லாமிய மக்கள், சிறுபான்மை மக்களுக்கு துரோகம் செய்தவர்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள். வேளாண் மசோதாக்களை ஆதரித்து விவசாயிகளுக்கு துரோகம் செய்தவர்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள். இன்றைக்கு எஸ்.ஐ.ஆர்ரையும் ஆதரித்து தமிழ்நாட்டு மக்களுக்கும் துரோகத்தை இழைத்திருக்கிறார்.

அவர் அவர்களுக்கு மட்டுமா துரோகம் செய்தார்? சசிகலாவுக்கு துரோகம் செய்தார். டி.டி.விக்கு துரோகம் செய்தார். ஓ.பி.எஸ், செங்கோட்டையன் என்று அவருடைய பட்டியல் நீண்டுகொண்டே போகும். எடப்பாடி பழனிசாமி அவர்கள் துரோகம் செய்யாமல் இருக்கக்கூடிய ஒரே ஆள் அமித்ஷா அவர்கள் மட்டும்தான்.

எல்லாரும் தேர்தல் பிரச்சாரத்துக்குப் போனால் அவர்கள் செய்துள்ள சாதனைகளைச் சொல்வார்கள். ஆளுங்கட்சியின் மேல் விமர்சனம் வைப்பார்கள். ஏதாவது தவறு நடந்தால் அதைச் சுட்டிக்காட்டுவார்கள். ஆனால், இன்றைக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்பினார். நான் அப்போதே சொன்னேன். வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்புகிறீர்கள், நல்லாதான் இருக்கும் போகும்போது, ஒவ்வொரு நிறுத்தத்தில் ஒவ்வொருவராக இறங்குவார்கள். நீங்கள் கடைசியாக முடிக்கும்போது நீங்களும், டிரைவர் மட்டும்தான் மிஞ்சுவீர்கள் என்று நான் நான்கு மாதங்களுக்கு முன்பு சொன்னேன். இன்றைக்கு அதைச் செய்து காட்டி கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

பிரச்சாரத்துக்கு டெல்டா பக்கம் சென்றால் டி.டி.வி தினகரனைத் திட்டுகிறார். கோபி பக்கம் சென்றால் செங்கோட்டையனைத் திட்டுகிறார். தெற்குப் பக்கம் சென்றால் ஓ.பி.எஸ். அவர்களைத் திட்டிக்கொண்டு இருக்கிறார். ஒவ்வொருத்தராகக் கட்சியை விட்டு நீக்கி கொண்டிருப்பது தான் இன்றைக்கு எடப்பாடி பழனிசாமின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கடமைகள் மாதிரி இன்றைக்கு ஒவ்வொருத்தரையாகக் கட்சியிலிருந்து நீக்கக்கூடியவர்தான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்.

இதே நிலைமை தொடர்ந்தால் ஒரு நாள் எழுந்து எடப்பாடி பழனிச்சாமியை கட்சியிலிருந்து நீக்குறேன் என்று அவரே அறிக்கை விட்டாலும் விடுவார். அந்த நிலைமைக்கு இன்றைக்கு அ.தி.மு.க.வின் நிலைமை வந்திருக்கிறது. பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்த, எந்த கட்சியாவது இந்தியாவில் விளங்கி இருக்கிறதா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

கூட்டணி வைக்கிற கட்சிகளை முடித்துவிட்டு, அந்த இடத்தில் தன் இயக்கத்தைக் கொண்டு வருவது தான் இன்றைக்கு பா.ஜ.க.வின் முழு நேர வேலை. பா.ஜ.க. வெறும் வாக்குத் திருட்டில் மட்டும் ஈடுபடவில்லை. கட்சி திருட்டிலும் இன்றைக்கு ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

நான் இன்றைக்கு அடித்துச் சொல்கிறேன். அ.தி.மு.க – பா.ஜ.க மொத்தமாக சுருட்டப் போகிறதா இல்லையா என்று நீங்கள் பாருங்கள். ஏனென்றால், பா.ஜ.கவை பொறுத்தவரைக்கும், மற்ற கட்சி எல்லாம் அழிய வேண்டும், பா.ஜ.க மட்டும் தான் இருக்க வேண்டும் என்பது தான் அவர்களின் ஒரே எண்ணம்.

ஒரே தேர்தல், ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கட்சி என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இதையெல்லாம் எதிர்த்து மிகப் பெரிய ஒரு ஜனநாயகப் போர் நடத்திக் கொண்டு இருக்கக்கூடிய இந்தியாவிலேயே ஒரே முதலமைச்சர் நம்முடைய கழகத் தலைவர்தான் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்கு உணர்ந்திருக்கிறார்கள். நாம் இதைத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்டக் கழகச் செயலாளர் செஞ்சி மஸ்தான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தமிழ்ச்செல்வன், சீதாபதி சொக்கலிங்கம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கடலூர் புகழேந்தி, மருத்துவர் அணி துணைத் தலைவர் கம்பன், மாவட்ட அவைத்தலைவர் சேகர், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் விஜயகுமார், விஜயராகவன், பச்சையப்பன், நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியம், பேரூர் கழகச் செயலாளர்கள் சம்பத், கார்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், பேரூராட்சித் தலைவர்கள் முருகன், முக்தியார் அலி, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி.ரமேஷ், எஸ்.என்.ஆர்.உதயகுமார், எம்.டி.பாபு, அண்ணாமலை, விஜயகுமார், கோபால கிருஷ்ணன்...

அதேபோல, மேலமைனூர் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த ரு. ஈ. சுப்ரமணியம் அவர்களின் பதிவு கிளைச் செயலாளர்களை மேலும் நாம் ஊக்குவிக்க வேண்டும் என்று இங்கே அவருடைய விருப்பத்தைச் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவிலேயே எந்தக் கட்சிக்கும் இல்லாத கட்டமைப்பு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதற்கு மிக மிக முக்கியக் காரணம் நம்முடைய கிளைச் செயலாளர்கள்தான். 75 வருடம் நம்முடைய இயக்கம் இன்றைக்கும் உயிர்ப்போடும், வலிமையோடும் இருப்பதற்குக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய கிளைச் செயலாளர்கள் ஆகிய நீங்கள், உங்களுடைய உழைப்புதான். கலைஞர் அவர்கள், நம்முடைய தலைவர் அவர்கள் கிளைக் கழகத்திற்கு எப்போதுமே அதிக முக்கியத்துவம் கொடுப்பார். அதேபோல மாவட்டக் கழக நிர்வாகிகளும் கிளைக் கழகத்திற்கு அதே முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறோம். தலைவர் அவர்கள் தொடர்ந்து இந்தக் கிளைக் கழகத்திற்கு, கிளைச் செயலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய அந்த முக்கியத்துவத்தை நிச்சயம் கொடுப்பார்.

நாரணமங்கலம் கிளையிலிருந்து திரு. வடமலை அவர் கேட்டிருக்கக்கூடிய கேள்வி: இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகம் உருவாக்கிக் தர வேண்டும் என்று சொல்லியி ருக்கிறார்.

இந்த நான்கரை வருடத்தில் 10 லட்சம் கோடிக்கும் மேல் முதலீட்டை ஈர்த்து 32 லட்சம் வேலைவாய்ப்பை நம்முடைய அரசு உருவாக்கி இருக்கிறது. பொதுவாக எல்லா மாநிலத்திலும் தொழிற்சாலைகளைப் பார்த்தீர்கள் என்றால், அந்த மாநிலத்தின் தலைநகரத்திலேயோ அல்லது தலைநகரத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய நகரங்களிலேயோ மட்டுமே அமையும். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும்தான் தூத்துக்குடி, ஒசூர் போன்ற இடங்களிலேயும் தொழிற்சாலைகள் இன்றைக்கு அதிகமாக அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல, நான் முதல்வன் போன்ற திட்டங்களின் மூலம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பும் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

செஞ்சி நகரத்திலிருந்து பழனி அவர்கள். வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் இங்கே பதிவு செய்திருக்கிறார்.

நல்ல சிறப்பான ஒரு ஆலோசனை. அதற்காக உங்களிடம் வேண்டுகோள் வைப்பதற்காகத் தான் இங்கே நான் வந்திருக்கிறேன். ஏற்கனவே நம்முடைய தலைவர் அவர்கள் 'ஓரணியில் தமிழ்நாடு' என்கிற பிரச்சாரத்தை முன்னெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று ஏறி இறங்கி கிட்டத்தட்ட ஒரு கோடி உறுப்பினர்களை டிஜிட்டல் முறையில் இயக்கத்தில் நாம் சேர்த்தோம். ஒரு கோடி குடும்பங்களைச் சென்று அடைந்திருக்கிறோம். கிட்டத்தட்ட 3 கோடி பேரைச் சேர்த்திருக்கிறோம். இதற்கு மிக மிக முக்கியமானக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய பாக முகவர், கிளைக் கழக நிர்வாகிகள் நீங்கள் இல்லாமல் அது நிறைவேறி இருக்காது.

அதேபோல இன்றைக்கு இந்த S.I.R. (Special Integrated Revision) மூலம் தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க. தேர்தல் ஆணையத்தின் உதவியோடு வந்த ஆபத்தைப் போக்குவதற்கு இன்றைக்குக் களத்தில் வீடு வீடாகச் சென்று தி.மு.க. நிர்வாகிகள் தான் அந்தப் பிரச்சனையையும் தீர்த்துக் கொண்டுள்ளனர். வேறு எந்தக் கட்சியும் இன்றைக்குக் களத்தில் இருக்கிற மாதிரி இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் தான், உடன்பிறப்புகள் தான் இன்றைக்குக் களத்திலிருந்து இந்த S.I.R ஐயும் வெற்றிகரமாக முடித்திருக்கிறோம். நான் இன்றைக்குப் பேசிவிட்டு அடுத்த தொகுதிக்குச் சென்றுவிடுவேன். அடுத்த மாவட்டத்திற்குப் போய் விடுவேன். ஆனால், அடுத்த நான்கு மாத காலம் இந்தத் தொகுதியில் இருந்து உங்களுக்குள் அந்தப் பொறுப்புகளை, பிரச்சினைகளை, வேலைகளைப் பிரித்துக் கொள்ள வேண்டும். திண்ணைப் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாக்காளரையும் நீங்கள் நேரடியாகச் சந்தித்து அவர்களுடைய நம்பிக்கையைப் பெற வேண்டும். நம்மால் செய்து கொடுக்க முடிகிறதோ இல்லையோ, அவர்களுடைய பிரச்சினையைத் தயவுசெய்து காது கொடுத்து இரண்டு நிமிடம் கேட்க வேண்டும்.

பிரச்சினையைத் தீர்த்து கொடுத்தால் இன்னும் சிறப்பு. ஆனால், காது கொடுத்துக் கேட்டாலே பிரச்சினையைச் சொல்கிறவர்களுக்கு மனதில் இருக்கக்கூடிய பாதி பாரம் இறங்கிவிடும். பரவாயில்லை, வந்து கேட்கிறார்களே, செய்து கொடுக்கிறார்களோ இல்லையோ, நமது பிரச்சனையாவது வந்து கேட்கிறார்களே என்று தோன்றும். ஆனால், நிச்சயம் செய்து கொடுக்க முடிந்தால் செய்து கொடுக்க வேண்டும். உங்களால் முடியவில்லை என்றால் உங்கள் ஒன்றியச் செயலாளரிடம் சொல்லுங்கள். இல்லை என்றால் உங்கள் மாவட்டச் செயலாளரிடம் சொல்லுங்கள். உங்களுடைய மாவட்டப் பொறுப்பு அமைச்சரிடம் சொல்லுங்கள். நிச்சயம் மக்களோடு நெருங்கிய தொடர்போடு இருந்து அடுத்த நான்கு மாத காலம் நம்முடைய வெற்றியை உறுதி செய்ய வேண்டும். செஞ்சி தொகுதியில், வாக்கு வித்தியாசத்தை அதிகப்படுத்திக் காட்டி, நம்மை எதிர்த்து யார் நின்றாலும், டெபாசிட் காலியாக்குவதற்கு நம்முடைய வெற்றியை நாம் உறுதி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலமைனூர் கிழக்கு ஒன்றியத்திலிருந்து திரு. காளிதாஸ் அவர்கள். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஏற்கனவே ரூ. 1,000 மாதம் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதை ரூ.1,000லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தித் தர வேண்டும் என்று அவர் கோரிக்கை வைத்திருக்கிறார்.

ஏற்கனவே 1 கோடியே 15 லட்சம் பேருக்குக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களிடம் நானும், மற்ற அமைச்சர்களும் வேண்டுகோள் வைத்து இப்போதுதான் தலைவர் அவர்கள் 1 கோடியே 15 லட்சத்தை இன்னும் அதிகப்படுத்துவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார். நிச்சயம் உங்களுடைய கோரிக்கையைத் தலைவரிடத்தில் எடுத்துச் சென்று, அந்த ரூ. 1,000யை, ரூ. 1,500ஆகவோ அல்லது அதற்கு மேலாகவும் தருவதற்கு ஆசைதான். ஆனால், நிதி நெருக்கடி உங்களுக்குத் தெரியும். முதலமைச்சருடைய கவனத்திற்கு நிச்சயமாக எடுத்துச் செல்கின்றோம்.

இங்கே பூத் கமிட்டி உறுப்பினர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள்தான் கழகத்தின் இரத்த நாளம். நீங்கள் இல்லாமல் வரப்போற வெற்றி கிடையாது. நீங்கள் இல்லாமல் 2021ஆம் ஆண்டு தேர்தல் வெற்றி இல்லை. 2024 நாடாளுமன்ற தேர்தல் வெற்றி இது எல்லாத்துக்கும் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய பூத் கமிட்டி உறுப்பினர்கள் நீங்கள்தான்.

நீங்கள் 10 ஓட்டுக்கு நான் பொறுப்பு, இந்த 10 குடும்பத்திற்கு நான் பொறுப்பு, இந்த இரண்டு தெருவுக்கு நான் பொறுப்பு என்று உங்களுக்குள் அந்தப் பொறுப்புகளை நீங்கள் பிரித்துக் கொள்ள வேண்டும். இன்றையிலிருந்து பிரச்சாரத்தை நீங்கள் துவங்க வேண்டும். நம்முடைய அரசின் சாதனைகள், கழகத்தின் வரலாறு இதை மக்களிம் கொண்டு சென்று நீங்கள் சேர்க்க வேண்டும்.

இத்தனை பேர் இன்றைக்கு இவ்வளவு பொறுப்புடன், எழுச்சியுடன் வந்திருக்கிறீர்கள். என் பேரை சொல்லும்போது வரவேற்றீர்கள். விசில் அடித்து, கைதட்டி ஆரவாரத்துடன் வரவேற்கிறீர்கள். மிகப் பெரிய ஒரு எழுச்சியான வரவேற்பைக் கொடுக்கிறீர்கள். ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் புரிந்து கொள்ளுங்கள். நாம் வெறும் கைதட்டி, விசில் அடித்து, கூச்சல் போட்டு கலையிற கூட்டம் கிடையாது. உணர்ச்சியோடு கூடி, உணர்ச்சியோடு கலையிற கூட்டம்.

இன்றைக்கு கிட்டத்தட்ட 1,000 பேர் இந்த அரங்கத்தில் அமைதியாக உட்கார்ந்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் அத்தனை பேரும் என்னை வெறுமனே பார்க்க வந்த கூட்டம் கிடையாது. பார்க்க வந்த கூட்டமாக இருந்தால் பார்த்த உடனே நீங்கள் எல்லாம் கிளம்பி இருப்பீர்கள். இவன் என்ன பேச வந்திருக்கிறான். தி.மு.க.காரன் கிட்ட பேசித் தப்பிக்க முடியாது. அதுவும் தவறாகப் பேசினால் யாராக இருந்தாலும் நீங்கள் சுட்டிக் காட்டுவீர்கள். அதனால் உங்களிடம் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும்.

அதனால்தான் சொல்கிறேன். எனக்கு எந்த அளவுக்குப் பொறுப்புணர்ச்சி இருக்கிறதோ, அதைவிட 100 மடங்கு கூடுதல் பொறுப்புணர்ச்சி இப்போது உங்களிடம் இருக்கிறது. ஏனென்றால் உங்களிடம் நான் அந்தப் பொறுப்பை எதிர்பார்க்கிறேன். எனவே அடுத்த நான்கு மாதம் மிக மிக முக்கியமான காலம். நீங்கள் அடுத்த 4 மாதம் இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்து நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம், நம்முடைய தலைவர் சொன்னார். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று 200 தொகுதிகளை நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்காகக் கொடுத்திருக்கிறார்.

நான் தொடர்ந்து மக்களைச் சந்தித்து வருகிறேன். பொதுமக்களையும் சந்திக்கிறேன். கட்சிக்காரர்களையும் சந்தித்து வருகிறேன். அவர்களின் எழுச்சி, உணர்வு, அன்பு, பாசம் இதையெல்லாம் பார்க்கும்போது, குறிப்பாகத் தாய்மார்கள், இளைஞர்கள், பல்வேறு சமுதாயத்தினர் எல்லாரையும் தொடர்ந்து கவனித்து வருகிறேன். அவர்களுடைய ஆர்வம், எழுச்சி எல்லாம் பார்க்கும்போது 200 இல்லை 200க்கும் அதிகமான தொகுதியில் நிச்சயமாக நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, தி.மு.க தலைமையிலான அணி நிச்சயம் வெல்லும்.

அதன் தொடக்கமாக இந்த மூன்று தொகுதியின் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், அந்த வெற்றி உங்கள் கைகளில்தான் இருக்கிறது. நீங்கள் அதைச் செய்து கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் இன்னொரு வேண்டுகோள். பேசி முடித்த பிறகு உங்கள் ஒவ்வொருவருடனும் தனித்தனியாக இங்கே இருந்து நான் புகைப்படம் எடுத்துக் கொள்ளப் போகிறேன். இதே பொறுப்புணர்வோடு, இதே உணர்வோடு தயவுசெய்து ஒவ்வொருத்தராக மேல வந்தீர்கள் என்றால் எல்லோருடனும், தனித்தனியாக நான் புகைப்படம் எடுத்துக் கொள்கிறேன்.

நீங்க எவ்வளவு ஆசையாக வந்திருக்கிறீர்களோ, அதே ஆசையோடும் ஆர்வத்தோடுதான் உங்களைச் சந்திப்பதற்கு நான் வந்திருக்கிறேன் என்று கூறிக்கொண்டு, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாகச் செய்த அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மஸ்தான் அவர்களுக்கும், கழகத்தின் மூத்த முன்னோடிகள் அத்தனை பேருக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

### பங்கேற்றவர்கள்!

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக்,மருத்துவர் அணியின் துணைத் தலைவர் கம்பன், தொகுதி பார்வையாளர்கள் இல. புகழேந்தி கார்த்திகேயன்,மாவட்ட அவைத்தலைவர் சேகர், மாநிலத் தீர்மாண குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார்,அருணகிரி,செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார் நெடுஞ்செழியன் சீனி சின்னராஜ் பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன் சாந்தி ஏழுமலை ஒன்றிய கழகச் செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணின், பேரூர் கழகச் செயலாளர்கள் சம்பத், கார்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், பேரூராட்சித் தலைவர்கள் மொக்தியார் அலிமஸ்தான், முருகன், மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடக்கநந்தல் க.பெ. நெடுமாறன்
### டிசம்பர் 7 (1994)



சின்னசேலம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். தென்னாற்காடு மாவட்ட இலக்கிய அணிச் செயலாளராகவும் பொறுப்பேற்று செயல்பட்டவர்.

இந்தி எதிர்ப்பு, கறுப்புக்கொடி, கைலாசம் கமிசன் சட்ட எரிப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1946 மே 11, 12 தேதிகளில் மதுரையில் கறுப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாட்டில் தனது துணைவியாருடன் கலந்து கொண்டவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “கொள்கை பிடிவாதக்காரர்” என்று புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சித்தமல்லி ந.சோமசுந்தரம்
### டிசம்பர் 7 (2022)



இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.